விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 23 துல்ஹஃ 8 இதழ் 206
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8 9-1981



டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174


## 64 தி.மு.க.வினர் கைது!

சென்னை, செப் 7

சென்னையில்உள்ள இலங்கைத் தூதரகத்தின் முன் இலங்கை தமிழ் மக்களுக்கு ஆதரவாக இன்று ஆர்ப்பாட்டம் நடத்திய தி மு கவினர் 64 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களுள் 4 பேர் பெண்கள்.

இலங்கை வன்செயல்களைக் கண்டித்து இம்மாதம் 15ம் திகதிவரை சென்னையில் தினமும் ஆர்ப்பாட்டம் நடத்துவதென்றும் இறுதி நாள் ஆர்ப்பாட்டத்தை திரு கருணாநிதி தலைமையில் நடத்துவதென்றும் தி மு க தீர்மானித்துள்ளது தெரிந்ததே. இ

# தமிழர் கூட்டணி பகிஷ்கரிப்பு:

# 16-ல் இறுதிமுடிவு!

## இணக்கம் காணப்பட்ட

### கோரிக்கைகளை கூட்டணி வலியுறுத்தும்

(கொழும்பு)

**தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்கள் தொடர்ந்தும் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பார்களா என்பது இம்மாதம் 16ம் திகதி தெரியவரும். அன்றையதினம் கொழும்பில்கூடவிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு இதுபற்றி இறுதி முடிவு எடுக்கும்.**

### ஐந்து கோரிக்கைகள்

தமிழர் விடுதலைக் கூட்டணி வற்புறுத்திவரும் 5 அம்சக் கோரிக்கைகளில் 4 அம்சங்களுக்கு ஏற்கனவே அரசு தரப்புடன் இணக்கம் ஏற்பட்டுள்ளது என்றாலும் இக்கோரிக்கைகள் நடைமுறையில் செயலாக்கப்பட்டால் மாத்திரமே பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவது பற்றி தமிழர்விடுதலைக் கூட்டணி ஆலோசிக்கும் என்று த வி. கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

### 4 அம்சங்களில் இணக்கம்

ஃ ஊர்காவல் படைகளை அமைத்தல் ஃ வன்செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு. ஃ தமிழ்ப்பகுதிகளிலிருந்து ராணுவத்தை அகற்றுவது. ஃ தமிழ்ப்பகுதிகளில் எழுபத்தைந்து வீதம் தமிழ் முஸ்லிம் பொலிசாரை நியமிப்பது போன்ற நான்கு அம்சங்களிலேயே அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

மே—ஜூன் வன்செயல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் சர்வதேச மன்னிப்புச்சபை அல்லது சர்வதேச சட்ட நிபுணர்கள் சபை உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கையில் மாத்திரமே இன்னமும் இணக்கம் ஏற்படவில்லையென தெரிகின்றது.

16ம் திகதி ஜனாதிபதி தலைமையிலான உயர்மட்டக் குழு கூடவிருக்கின்றது இக்குழுவில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பாராளுமன்ற பகிஷ்கரிப்பைக் கைவிடுவது பற்றி ஆலோசிக்கப்படும் என்று கருதப்படுகின்றது.

இணக்கம் காணப்பட்டுள்ள கோரிக்கைகள் நடைமுறைப் படுத்தப்படுவதை யொட்டியே பகிஷ்கரிப்புக் கைவிடப்படும் என்ற தமது நிலையை இக்குழு கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் வற்புறுத்துவார்கள் என்று தெரிகின்றது. (ம)

### விசாரணை முடிவுற்றது

கொழும்பு

பொத்துவில் முதலாவது எம் பி எம் ஏ எம் ஜலால்தீனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணையை விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முடித்துக்கொண்டது

## சென்.ஜோன்ஸ் கல்லூரியில் கொள்ளையர் கைவரிசை!

[யாழ்ப்பாணம்]

முகமூடி அணிந்த 5 பேர் கொண்ட கோஷ்டி ஒன்று நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி இரவுக் காவலாளியை பணயம்வைத்து கல்லூரின் காரியாலயக் கதவை உடைத்து உட்சென்று அங்கிருந்த அச்சுப்பிரதிசெய்யும் இயந்திரத்தைத் தூக்கிச் சென்றுள்ளது.

காவலாளியை விறாந்தையில் குனிந்தபடி இருக்கச் செய்து கைத்துப்பாக்கியை நெஞ்சுக்கு நேராகவும், கிறிஸ் கத்தியை இன்னொருவர் பின்னுக்கும் பிடித்துக்கொண்டு சத்தம்செய்யவேண்டாமென்று எச்சரிக்கைசெய்து மேற்படி களவை நடாத்தியுள்ளனர்.

கட்டிடத்தின் மேல்ஓட்டைக் கழற்றி உள்ளே இறங்கியவர்களால் பொருளை வெளியே எடுத்துச்செல்ல முடியாமையினால் வெளியில்நின்று கதவை உடைத்து உள்ளே சென்று பொருளைக் களவாடிச்சென்றுள்ளனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

தனபதி குடும்பத்துக்கு

## தமிழக அரசு ரூ. 25,000 உதவி

சென்னை, செப் 7

இலங்கையில் உல்லாசப் பிரயாணம்செய்தபோது கொலைசெய்யப்பட்ட திரு. தனபதியின் குடும்பத்தினருக்கு தமிழகஅரசு 25 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கும்.

இத்தகவலை தமிழக முதல்வர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் தெரிவித்தார். [இ]

வேதாரணியத்தில் ஒதுங்கிய இலங்கையர் சடலம்

## கலைஞர் எழுப்பிய சந்தேகம்

சென்னை, செப். 7

வேதாரணியம் கடற்கரையில் ஒதுங்கிய இலங்கையரின் சடலங்கள் இலங்கையில் கொலை செய்யப்பட்டு கடலில் வீசப்பட்டவர்களுடையதாக இருக்கலாம் என்று தி. மு. க தலைவர் திரு. மு கருணாநிதி தெரிவித்தார்.

''இவ்விடயம் குறித்து நான் தமிழக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் எனது கூற்றை நிராகரித்துவிட்டனர். எனவே கௌரவம் பார்க்காமல் அரசு இது குறித்து விசாரணை நடத்தவேண்டும்'' என்று தாம் அரசைக் கேட்டுள்ளதாகவும் திரு கருணாநிதி தெரிவித்தார். இ

## கொழும்பு அ.ச.உறுப்பினர் சொத்து பிரகடனம்செய்வர்

### ஏகமனதாக தீர்மானம்

[கொழும்பு]

கொழும்பு மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் தமது சொத்துக்களைப் பிரகடனம் செய்வர்.

இது தொடர்பான தீர்மானம் ஒன்று நேற்றைய கொழும்பு அபிவிருத்திசபை கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இத் தீர்மானத்திற்கமைய கொழும்பு மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள் கடந்த ஜூலை மாதம் 20ம் திகதி தம்மிடம் உள்ள சொத்துக்களை பிரகடனம்செய்வர். இ

## ஆவணிமூலத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

இத்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இன்று காலை ஆவணிமூலத்திருவிழா நடைபெறுகிறது. [இ.]


உ

திருமண திருமுகம்

மணமகன்:
செல்வன் ஜெயக்குமார்
மணமகள்:
செல்வி கலாயினி சித்ரா
[சாவகச்சேரி — நுணாவில் கிழக்கு
திரு திருமதி அ கந்தையா அவர்களின் புதல்வி]
காலம்: 10-09-1981 வியாழக்கிழமை
காலை 9-15 — 10-04 வரை
இடம்: சாவகச்சேரி கற்குளி கந்தசுவாமி கோவில்
உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்

திரு திருமதி செ. யோகேஸ்வரன்.

தாமோதரம் வீதி, சாவகச்சேரி. [0816]


## பல்கலைக்கழகங்களில் 5,025 பேருக்கு அனுமதி

### செப். 15க்கு முன் விபரம் வெளிவரும்

[கொழும்பு]

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் இவ்வாண்டு அனுமதி பெறும் மாணவர்களுக்கான பல்கலைக்கழகம், பீடம், பயிற்சி நெறி ஆகிய விபரங்கள் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அவர்களுக்கு அறிவிக்கப்படும்

கல்வி ஆண்டு அடுத்த மாதம் 5ம் திகதி ஆரம்பிப்பதற்குமுன் வசிப்பிடவசதி உட்பட சகல வசதிகளையும் தேடிக்கொள்வதற்கு வழிசெய்யும் முகமாகவே அனுமதிபற்றிய விபரங்கள் இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் அறிவிக்கப்படுவதாக பல்கலைக் கழக மானியக்குழு தெரிவித்துள்ளது

இவ்வாண்டு இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதிப்பதற்கு 5,025 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

### மணிவாக்கு

தொண்டுசெய்வதற்கு தேவைப்படும் கருவிகள் இரண்டு: விரிந்த இதயம்; நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒழுக்கம்.

—மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## சுய நிர்ணயம்

மாவட்ட கிராம மட்டங்களில் மலிந்துகிடக்கும் பிணக்குகளும் பிரச்னைகளும் கொழும்பில் கொலுவிருக்கும் மத்திய ஆட்சியின் திறமையின்மையாலே தீராமல் தேங்கிக்கிடக்கின்றன என்பது பலராலும் ஒப்புக்கொண்டமுடிவு

நாட்டின் மக்கள் கிராமத்திலேயே வாழ்கின்றனர். பொதுத்தேர்தலிலும்; கிராம, பட்டினசபைத்தேர்தலிலும் வாக்களிப்பதாலே தத்தம் கிராமங்களும், மாநிலங்களும் வளர்ச்சியடையவில்லையென்பது அவர்கள் கண்டமுடிவு.

ஜனநாயக கோட்பாடு கருத்துள்ளதாகத் தொழிற்படவேண்டுமானுல், கிராமவாசிகள் தங்கள் அலுவல்களில் நேரடிப்பங்குகொள்ளவேண்டும். இந்த நன்னேக்கம் கொண்ட சாதனமே மாவட்ட அபிவிருத்திச் சபைகள்.

பொருளாதாரத்தொல்லைகள் மட்டுமல்ல அரசியல் சிக்கல்களுக்கும், ஏனைய பல சமுதாய நோய்களுக்கும் இது ஒரு சர்வரோக நிவாரணியென்று அரசு பிரசாரம்செய்தது.

பிள்ளையாரைப் பிடிக்க பெருச்சாளியாய் மாறலாமென்ற அச்சம் அரசியல் அவதானிகளுக்கு. இல்லாமலில்லை. இருந்தும் செவ்வனே தொழிற்படும் சபைகள் நிச்சயம் முன்னேற்றம் காணமுடியுமென்ற நம்பிக்கை பரவலாக இருந்து வருகிறது.

இதனை எதிர்த்த சுதந்திரக் கட்சியும் முற்றுக எதிர்க்கவில்லை, எதிர்ப்பின் காரணமும் அரசியல் வேறுபாட்டை இட்டியதே. இடதுசாரிக்கட்சிகளின் அரசியல் கொள்கைக்கு பரவலான நிர்வாகம் மாறுபட்டதே!

அபிவிருத்திச் சபைகளின் ஆரம்பத்தை நோக்குங்கால் எதிர்பார்த்த அளவிற்கு பெருமிதங் கொள்ளவேண்டிய அறிகுறிகள் எவற்றையும் கண்டிலோம்.

சுயநிர்ணயம் என்பெருபதம் ஆங்கில அரசியல் பதம் ஒன்றின் நேரடி மொழிபெயர்ப்பு. சுதந்திரம், சுயாட்சி, சுயநிர்ணயம் என்பன மக்கள் தங்களைத் தாமே ஆளுங்கருத்தின் நுணுக்கமான வேறுபாடுகள்.

நாட்டின் தமிழ் மக்களின் நெடுங்காலக் குறைகளுக்கு 'சுயநிர்ணயம்' ஒரு தகுந்த தீர்வென்பதை நாட்டின் பல—ஏன் எல்லா கட்சிகளும் ஒத்திருக்கின்றனவெனலாம்,

இந்தச் சுயநிர்ணயம் [Autonomy] அபிவிருத்திச் சபைகளை செவ்வனே தொழிற்படுத்துவதால் தானகவே மிளிருமென்பது இன்னெரு நம்பிக்கை.

பிரதமர் பிரேமதாசா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது, எங்கள் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தாம் கொண்டுவரவிருக்கும் மாவட்ட அபிவிருத்திச்சபைகளில் பெரு நம்பிக்கைகொண்டிருந்தார்.

அதேபோன்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் இப்புதிய அரசியல் மன்றத்தில்-மினி பாராளுமன்றத்தில் நம்பிக்கை வைத்திருப்பதையிட்டு பெருமகிழ்ச்சிகொண்டிருந்தார்.

அபிவிருத்திச்சபை தேர்தல் முன்னும் பின்னும் என்ற கறைபடிந்த அத்தியாயத்தை மறந்து, மறைத்து, அதற்கப்பாலே காலெடுத்துவைப்போமானுல் காண்பதென்ன?

கருத்தற்ற அரசியல் மோதல்களும், சில்லறைச் சண்டைகளும் உதயமாகின்றன; ஒய்வடையும் அறிகுறிகள் காணப்படவில்லை. சுயநலப்போக்குத் துள்ளி ஆடுகின்றது.

தமிழ்ப் பிரதேசங்கள் ஒற்றுமைப்பட்டு முன்னேறுமாயின் மாநில அரசை மறுக்க எவரால் முடியும்?

ஆனுல் நிலைமை என்ன? மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச்சபை அவசியமற்ற அரசியல் வேறுபாடுகளை விருத்தி செய்யுமாற்போல் தெரிகிறது. அரசியல் பந்து விளையாட்டில் வீண் விரயம் செய்கின்றது.

இவ்வித சாதாரண வாக்குவாதங்கள், அபிவிருத்திக்குரிய ஆக்கபூர்வமானதுறைகளில் அவதானத்தைச் செலுத்த உதவுமா? மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர் அரசியல் முதிர்வுடன் வேறுபாடுகளைச் சமாளிக்க முடியாவிட்டால் மாவட்டம் எவ்வாறு வளர்ச்சியடையும்? சுயநிர்ணயம், மாநில அரசு என்பனபற்றி பேசிக்கொண்டிருந்தால் அவை கிட்டுமா?

அபிவிருத்திக்கு ஆணிவேர் ஒற்றுமைப்பட்ட கருத்து; செலவாக்குள்ள கருத்தாக மலர்ந்து மத்திய அரசின் ஆதரவைப்பெற்று மாவட்ட அரசாக மாறவேண்டும்.

மாவட்ட அரசு மாநில அரசாக விசாலமடைந்தால் மக்கள் இன்று படும் பல கஷ்டங்கள் மறையும். தேசிய ஒற்றுமைக்கு பாதை திறக்கப்படும். இது ஒரு பெரிய திட்டம்; வெறுங் கற்பனைபோல் தோன்றும்.

உண்மையில் கற்பனைக் கதையாகும் ஆபத்து என்றுமுண்டு. ஆனுல் ஒரு நிபந்தனை-கடினமான நிபந்தனை நிறைவேற்றப்படுமானுல், பொதுவுடமைக் கட்சியினர் போதிக்கும் சமத்துவ வாழ்வை அபிவிருத்திச்சபைகளால் சாதிக்க முடியும்.

பொதுவாகச் சொன்னுல் கிராமத்தை வசிக்க மிகவும் ஒரு ஏற்ற இடமாகச் செய்ய வேண்டும்; சுதந்திரம் தன்னம்பிக்கை சுய உதவி ஆகியவற்றின் சிறப்பை கிராமவாசிகளுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

எனவே கிராமத் தொண்டர்சபை உருவாக வேண்டும்; மாவட்ட அபிவிருத்தியின் இருகண்கள்; நிதி, தொண்டர் சபை, சுயநிர்ணயத்தின் அத்திபாரம் இதுவே!

---

### அமைதியை பேணிப்பாதுகாத்த

# வவனியா பொலிஸாருக்கும் அரச அதிபருக்கும் பாராட்டு

## வவனியா மாவட்டசபை தீர்மானம்

[வவனியா]

வேலையின்றி வரட்சியால் கஷ்டமுறும் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் முகமாக அரச திணைக்களங்களினுல் செய்யப்பட்டுவருகின்ற ஒப்பந்த வேலைகள் எல்லாவற்றையும் இம்மாவட்டத்திலுள்ள கிராம அபிவிருத்தி நிறுவனங்களுக்கு வழங்கவேண்டும்.

வவனியா மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது

சபைத் தலைவர் திரு.மு. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் மேற்கண்ட பிரேரணை வைக்கொண்டுவந்தார்.

திணைக்களங்கள் ஒப்பந்த வேலைகளை மேற்கொள்ளும்போது வெளி மாவட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறுர்கள். இதனுல் உள் மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக்கிட்டுவதிலலை என்று திரு தா சிவசிதம்பரம் சுட்டிக்காட்டினுர் அதே வேளையில் கிராம அபிவிருத்திச் சங்கங்களினுல் மேற்கொள்ளப்பட முடியாத வேலைகளை மட்டும் திணைக்களங்களிடம் ஒப்படைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 15-ம் திகதி இரவோடிரவாக ஆஸ்பத்திரிச் சந்தியில் நிறுவப்பட்ட புத்தர் சிலை அகற்றப்படவேண்டும் என்ற அவரது பிரேரணையும் நிறைவேறியது.

திரு வ. பரராஜசிங்கம் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது:- நெடுங்கேணி, செட்டிகுளம் ஆகிய இரண்டு கிராமிய வைத்தியசாலைகளிலும் இருந்து அவசர நோயாளிகளையும் கர்ப்பிணிகளையும் வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல அதிக தாமதமாவதால் நோயாளிகளின் உயிருக்கே ஆபத்து ஏற்படுகின்றது. இதனைத் தவிர்ப்பதற்காக இவ்விரு வைத்தியசாலைகளிலும் அம்புலன்ஸ் வண்டி நிறுத்தப்பட வேண்டும்.

போக்குவரத்து வசதிகுறைந்த மகா கச்சக்கொடியில் ஓர் ஆயுள்வேத வைத்தியசாலை ஆரம்பிக்கவேண்டும் என்ற பிரேரணையை திரு. பரராஜசிங்கம் சமர்ப்பித்தார்.

ஆயுள்வேத வைத்திய சாலையைவிட, அப்பகுதிக்கு அரசினர் வைத்தியசாலையே சிறந்தது என்றும் இதனை அமைக்க முடியாவிட்டால் ஆயுள்வேத வைத்தியசாலையை நிறுவுவதென்ற திருத்தத்துடன் பிரேரணை நிறைவேறின.

கடந்த மாதம் நாடெங்கும் அசம்பாவிதங்கள் நடைபெற்ற வேளையில் வவுனியா மாவட்டத்தைப் பொறுப்புடனும் கண்ணுங்கருத்துமாகவும் பாதுகாத்து அமைதியைப் பேணிய வவுனியா பொலிஸ் அத்தியட்சகரையும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் இருவரையும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியையும் பாராட்ட வேண்டும் என்ற பிரேரணை மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. ஜி. முதன்னயக்காவிற்கும் அவரது கடமையுணர்வுடன் கூடிய சேவையைப் பாராட்டவேண்டும் என்ற திருத்தத்துடன் நிறைவேறியது.

திரு த. பரம்நாதனினுல் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறின,

செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் அடங்கும் இயக்கன்குளம், சின்னக்குளம், வவனியா தெற்கு தமிழ்ப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் அடங்கும் மாளிகை ஆகிய குளங்களைத் திருத்த வேண்டும். [ஸ]

### கோரிக்கை

[வவனியா]

"வவனியா, ஆசிகுளம், வீமன்கல்லு, கறுவப்புளியங்குளம் ஆகிய கிராமங்களில் 1977ம் ஆண்டு கலவரத்தின் போது அழிக்கப்பட்ட 48 வீடுகளையும் அரசாங்கசெலவில் அமைத்துக்கொடுக்கவேண்டும்" என்று வவனியா மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. முருகேசு சிற்றம்பலம் கோரியுள்ளார்.

வவனியா மாவட்ட அபிவிருத்திசபை, அபிவிருத்திச் செயலகத்தில் கூடியபோது திரு மு சிற்றம்பலம் மேற்படிப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்துப் பேசினுர். அவர் மேலும் பேசுகையில், "77ம் ஆண்டு வீடுகளை இழந்த மேற்படி 48 குடும்பத்தினரும் வேறு இடங்களில் குடியிருக்கின்றுர்கள். ஜனதிபதியின் நிதியிலிருந்து நிதி ஒதுக்கி இவர்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

---

கீரிமலையில்

# நீராடுபவர்களிடம்

## தொடர்ந்து ரூ.1 அறவிடப்படுகிறது

[மாவிட்டபுரம்]

கீரிமலைக் கேணியில் நீராடுபவர்களிடம் தலைக்கு ஒரு ரூபா அறவிடுவதுதொடர்ந்து இடம் பெற்றுவருகிறது

கீரிமலைக் கேணியில் நீராடுபவர்களிடம் நபருக்குதலா ஒரு ரூபா வீதம் அறவிடும் நடைமுறை கடந்த சில மாதங்களின் முன்பிருந்து இடம் பெற்றுவருகிறது இந்நிலையில் இவ்வாறு ஒரு ரூபா அறவிடப்படுவதை பலர் கண்டித்திருந்தனர். யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையிலும் ஒரு ரூபா அறவிடுவது நிறுத்தப்பட வேண்டுமென்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

கீரிமலை கேணிப்பகுதி கடந்த சில மாதங்களின் முன்பு அபிவிருத்தி செய்யப்பட்டது தெரிந்ததே. இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள யாத்திரீகர்களுக்கான வசதிகளை பராமரிக்க உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வேதனம் வழங்க மேற்படி நிதியே பயன்படுவதாலும் மிகுதிநிதி கீரிமலையின் அபிவிருத்திக்கு உபயோகிக்கப்பட விருப்பதாலும் இந்த ஒரு ரூபா அறவிடப்படுவதை நிறுத்துவதில் சிரமம் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

---

# இன்று வேளாங்கண்ணி திருநாள்

இன்று அன்னை மரியாளின்பிறந்தநாள்இதுவே அருள்மிகு வேளாங்கண்ணித்திருத்தலத்தின் பெருநாளும் ஆகும்.

நாகபட்டிணத்திலிருந்து சுமார் எட்டுக்கிலோ மீட்டர் தூரத்தில் அலைகொஞ்சும் வெண்மணற்பரப்பிலே அமைந்தது வேளாங்கண்ணிச் சிற்றூர். இங்குதான் கருணைமழையான மேரிமாதா ஏழை இடைச்சிறுவன் முன் தோன்றி தன் தெய்வீக மகனுக்கு பால் வாங்கிக்கொடுத்ததாகவும், ஒரு முடச்சிறுவனுக்கு திருக்காட்சி நல்கி அவனைக் குணப்படுத்தியதாகவும் போற்றப்படுகிறது. பின்னர் போர்த்துக்கேச மாலுமிகள் கடலில் தத்தளித்த வேளையிலே தெய்வ சித்தத்தால் இவ் வருட்பதிக்கு கரை சேர்க்கப்பட்டு அவர்களாலேயே அன்னை வேளாங்கண்ணிக்கு சிற்றாலயம் எழுப்பப்பட்டதாக வரலாறு அன்னையின் அருட்பெருக்கின் சான்றுக ஆலயத்துக்கு அண்மையில் ஒரு காணிக்கை நூதனசாலை அமைந்துள்ளது. இங்கே பக்த கோடிகள் தாங்கள் பெற்ற பேருதவிக்காக அன்னைக்கு காணிக்கையாக அளிக்கப்பட்ட அன்பளிப்பு பொருட்கள் அவர்களுடைய புகைப்படங்களுடனும் கையெழுத்துக்கடிதங்களுடனும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இங்கு தங்க வைர வெள்ளியால் செய்த கை. காது. மூக்கு, வீடுகள் போன்ற பல அன்பளிப்புக்களுடன் சுகம் பெற்றவர்கள் விட்டுச்சென்ற இடுக்குத்தடிகள் தள்ளுவண்டிகள் கூட காட்சிக்குண்டு. ஆலயத்தில் இருந்து முக்கால் கிலோமீட்டர் தூரத்தில் அன்னை திருக்காட்சி நல்கிய மரத்தின் கீழ் அமைந்துள்ள நீர்த்தேக்கமுண்டு. இங்கு வரும் பக்த கோடிகள் இப்புனித நீரில் திருமுழுக்காடுவதுடன் தங்கள் புனித தேவைகளுக்காக இந்நீரை போத்தல்களில் எடுத்தும் செல்கின்றனர். இந் நீர் தடாகத்துக்கு போகும் வழியில் பதினுறு பிரிவுகளாக கிறீஸ்துவின் சிலுவையாத்திரை செதுக்கப்பட்டுள்ளது. மேலும் செபமாலையின் பதினைந்து தியானங்களும் இங்கு மனங்கவர் காட்சியாக்கப்பட்டுள்ளது.

தினமும் எறும்புகள் போல் நிரைநிரையாக ஊர்ந்துவரும் பிரயாணிகள் வாகனங்களும், காலை 5 மணிக்கு ஆலயமணி ஒலிபெருக்கியில் ஒலித்ததும் சகோதரிகளின் பக்தி இசையோடு திருப்பலிக்காக கூடும் மக்கள் தொகையும் 7-30மணி திருப்பலியின் பின் முழங்கும் செபமாலை ஓசையின சப்தமும், அன்னை வேளாங்கண்ணி மேல் பக்தர் வைத்துள்ள நம்பிக்கையின் எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன. துன்ப துயரங்கள் முட்டிமோதும் முகத்தோடு வந்தவர்கள் அமைதியான முகத்தோடு புறப்படும் காட்சி அன்னையின் அருள் திறனின் பிரதிபலிப்பு,

— பற்றிமாகரன்

---

### மக்கள் கருத்து

## இரவு கடைசி பஸ் நேரம்

யாழ்ப்பாணப்பகுதியில் நடந்த சம்பவங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணப் பஸ் நிலையத்திலிருந்து கடைசி பஸ் இரவு 9-30 மணிக்கு இப்பொழுது புறப்படுகிறது.

தற்பொழுது நிலைமை சீராகி வருவதால் கடைசி பஸ்ஸை இரவு 10 மணிக்கு முன்னர் போல் விடுவதால் பல பிரயாணிகளுக்குநன்மையேஏற்படும் இதுபற்றி பரிசீலனை செய்து இரவு கடைசிபஸ்ஸை யாழ் பஸ்நிலையத்திலிருந்து 10 மணிக்கு புறப்படச்செய்ய ஏற்பாடு செய்யுமாறு வட பிராந்திய போக்குவரத்து சபைத் தலைவரை கேட்டுக் கொள்கிறேன்,

ச. நடராஜா.
அச்சுவேலி.

# ஸினுயில் பல தேசப்படை: அரபுலீக் எதிர்ப்பு

நியூயோர்க், செப். 7

ஸினாய் பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கு திரட்டப்படும் பல்தேசப்படைக்கு துருப்புகளைகொடுத்துதவுவது "நேச நடவடிக்கையாக இருக்காது. இது ஐ நா சாஸனத்துக்கு முரணானது" என்று அரபு லீக்கின் ஐ நா பார்வையாளர் டாக்டர் குலோவிஸ் மக்ஸூத் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

வாஷிங்டனின் சட்டத்தாரம் எகிப்தும், இஸ்ரேலும் செய்து கொண்ட உடன்படிக்கையில் கீழ் சுமார் 3000 பேர் பலம் வாய்ந்த இப்படையில் அரைவாசிக்கு அதிகமான துருப்புகள் அமெரிக்க துருப்புகளாக இருக்கும்.

அமெரிக்க இராணுவத்தின் தலைமையில் ஸினுயில் பல் தேசப்படை நிறுவப்படவிருப்பது மத்தியகிழக்கு அரபுநாடுகளில் அமெரிக்கா இராணுவ ரீதியாக காலடிவைக்க வழி சமைப்பதற்கு போர்வையாக உள்ளது என்று அரபு லீக் நாடுகள் அஞ்சுகின்றன.

அமெரிக்காவின் திட்டத்தை நிறைவேற்ற வாஷிங்டன் செய்ரோவை உபயோகப்பதாகவும் அரபுலீக் கண்டித்துள்ளது.

வாஷிங்டனில்செனட் வெளிவிவகார உறவுக் கமிட்டியில் பேசியதனைஅமெரிக்கராஜாங்க காரியதரிசி நிக்கலஸ் வெலியோட்டிஸ் பல்தேசப்படைக்குலத்தின் அமெரிக்க நாடுகள் படைப்பிரிவுகளை அனுப்பும் என்று அறிவித்துள்ளார்.



(மட்டுவில்)

நுணுவிற்குளம் ஸ்ரீ கண்ணகை அப்பாள் ஆலயத்தில் இன்று விசேட அபிஷேகஆராதனைகள் நடைபெறுகிறது. ஆலயத்தின் பிரதமகுருவான அமரர் குருசாமி தீட்சகரின் (சபாபதிஐயர்) ஆறுவது ஆண்டு சிரார்த்தப் பூர்த்தி விழாவையடுத்தே இந்த ஆராதனைகள் இன்று நடைபெறுகின்றன.

## ஆளை மோதிவிட்டு ஓடிய வாகனம்:

# வாகனத்தைத் தேடுமாறு பொலிஸாருக்கு உத்தரவு

(சாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் 4 தினங்களாக வைக்கப்பட்ட ஆணின் சடலமொன்று எவராலும் அடையாளம் காணப்படாத நிலையில் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கு அருகாமையில் வீதியோரத்தில் சடலமொன்று கிடக்கக் காணப்பட்டபடியே அவ்வழியாகவ் வந்த லொறிச்சாரதி ஒருவர் தமது லொறியில் அதனை ஏற்றி தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்திருந்தார்.

இச்சடலம் நான்கு தினங்களாக ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது. இச்சவச்சாலையில் குளிர்சாதன வசதியின் இன்மையால் சடலம் பழுதடைந்து நாற்றம் எடுக்க ஆரம்பித்துவிட்டது. இதையடுத்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தினர். சடலத்தை எவரும் அடையாளம் காட்டவோ சொந்தம் கொண்டாடவோ முன்வரவில்லை.

பிரேத பரிசோதனையும் நடைபெற்றது. அச்சுவேலி வீதியால்வந்த வாகனமொன்று இந்த நபரை மோதிவிட்டு ஓடி மறைந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் விபத்து மரணம் என தீர்ப்பளித்த மரண விசாரணை அதிகாரி சம்பந்தப்பட்ட இலக்கமுடைய வாகனத்தை தேடிப்பிடித்துவைப்பதிறுமாறு காங்கேசன்துறை பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

## "மக்களிடையே

# ஒழுக்கம் கட்டுப்பாட்டை வளர்க்க வேண்டும்"

### — யாழ். எம். பி.

(கோண்டாவில்)

"இன்று தமிழ் மக்கள் எந்த வகையானபாதுகாப்பும்இன்றி வாழ்கின்றார்கள். இந்த நிலையில் சன சமூக நிலையங்கள் தமது பகுதி மக்களிடையே ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நீதியையும் பழக்கி அதன்படி நடக்க வழிசெய்து கொடுக்கவேண்டும்".

யாழ்ப்பாணம்எம். பி. திரு வெ. யோகேஸ்வரன்தாவடி தெற்கு காளி அம்பாள் சனசமூக நிலையத்தின் 7வது ஆண்டு விழாவில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. க. உலகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. வெ. யோகேஸ்வரன் மேலும் கூறியதாவது:

"சனசமூக நிலையம் மக்களின் எதிர்கால நல்வாழ்விற்காகப் பாடுபடவேண்டும். இப்பகுதிக்கு கட்டாயம் ஒரு சிறுவர் பாடசாலை இருக்க வேண்டியது அவசியம் மக்களிடையே ஏற்படும் பிரச்னைகளையாவற்றிற்கும் இத்தகைய நிலையங்கள் முதியோர்கள் மூலம் சமாதானத்தையும் பிரச்னையையும் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்நிலையத்தின் வளர்ச்சிக்கும் கிராமத்தின் வளர்ச்சிக்கும் தொகுதி எம். பி. யுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க உதவியாக இருப்பேன்.

"தமிழ் மக்களிடையே ஒற்றுமையும் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையும் இருக்கவேண்டியது அவசியம். இத்தகைய முயற்சிகளுக்காக இது போன்ற சன சமூக நிலையங்கள் பெரிதும் பாடுபட வேண்டும்" என்றார்.

மற்றும் வடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. செபநாயகம், திரு. குமாரவேலு, பொன் மதிமுகராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். (உ)

## சங்காபிஷேகம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வீரபத்திரர் சிவன்கோவிலில் ஆவணி மாத சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது. ஆயிரத்தெட்டு சங்குகளால் சுவாமிக்கு அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெற்று விசேட மேளக் கச்சேரியும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும்.

## "சனசமூக நிலையங்கள்

# பதிவு செய்வதற்கு ஒழுங்கு செய்யப்படும்"

(கோண்டாவில்)

யாழ். மாவட்டத்தில் கிராம மட்டங்களில் இருக்கின்ற பல சன சமூக நிலையங்கள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்றன. இவ்வாறு காணப்படும் சனசமூக நிலையங்கள்கிராமோதய சபைகளில் அங்கத்துவம் வகிக்கமுடியுமா என்பது சந்தேகம் உள்ளது ஆனபோதிலும்கூட இவை தாம் மக்களுக்கு செய்கின்ற தொண்டினைவிடக் கூடாது. பதிவு செய்யப்படாத சன சமூகநிலையங்கள் பதிவு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மானிப்பாய் மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. மா. நடராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தாவடிதெற்கு காளி அம்பாள் சன சமூகநிலையத்தின் 72 வது ஆண்டுவிழா திரு. உலகநாதன் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் திரு. நடராசா மேலும் கூறியதாவது; முன்பு சமூக நிலையங்கள் கல்வி விளையாட்டு என்பவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்துவந்தன. ஆனால் இன்று இவை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுவருகின்றன. அரசின் கொள்கை காரணமாக கிராமோதய சபைகள் உருவாக்கப்படுகின்றன. இதில் பல தரப்பட்ட சமூகநிறுவனங்களும் பங்கு ஏற்க வேண்டும் என்பதே இதன் விருப்பமாகும். கிராம மட்டங்களில் இருந்து கிராமோதய சபைகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்களில் இருந்தே பிரதேச சபை உருவாக்கப்படவுள்ளது. இவை மக்களின் பிரச்சனைகளை எடுத்து ஆராய்ந்து அவைபற்றி அபிவிருத்திசபைகளுக்கு எடுத்துக்கூறும்.

அரசுகள் மாறிமாறி வரும் பொழுது அவை முன்னையதிட்டங்களைக் கைவிட்டு புதிய புதிய திட்டங்களையும் கொண்டுவருகின்றது. முன்னைய அரசின்போது இணைக்க

(5-ம் பக்கம் பார்க்க)

# "திருவிழாவில் பணத்தைச்செலவிடாமல் இறைபக்தியை ஏற்படுத்த வேண்டும்"

### சுவாமி சித்ருபானந்தா உரை

(புலோலி)

"நாயன்மார்களால் உள உறுதியுடன் பாடப்பட்ட திருமுறைகளை நாம் மனமுருகிப் பாடவேண்டும். திருமுறைகளை மனமுருகிப் பாடினால் பேரின்பம் கிடைக்கும்."

இவ்வாறு வதிரி ஆலடிப் பிள்ளையார் ஆலய உற்சவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய சுவாமி சித்ருபானந்தா குறிப்பிட்டார்.

சுவாமி சித்ருபானந்தா தொடர்ந்து கூறியதாவது:-

மக்கள் எல்லோரும் ஒன்று கூடி எதுவித சாதி, சமய பேதமுமின்றி தூய்மையான உள்ளத்துடன் இறைவனை வழிபட்டு நிறைவுகள் பெறவேண்டுமென்பதற்காகவே முன்னோர்கள் திருக்கோவில்களை அமைத்தார்கள். இக்கோவில்களை வேடிக்கைகளுக்கான இடமாக்கி கோவில்களை முன்னோர் அமைத்த நோக்கத்தினின்றும் நாம் வழிதவறக்கூடாது.

'இறைவழிபாட்டின் மூலமே ஆன்மீக ஈடேற்றம் அடைய முடியும். மக்கள் இன்று பல இன்னல்களை அனுபவித்துவருவதற்கு இறைவழிபாட்டில் உண்மையான நம்பிக்கை இல்லாததே காரணமாகும். உண்மையான நம்பிக்கையுடன் இறைவழிபாடு செய்துவந்தால் ஆன்மீக ஈடேற்றம் கிடைக்கும்.

'இறைபக்தி மூலம் இறைவனைக்காணலாம். சேவையின் மூலம் இறைவனை அடையலாம். சைவசமயத்தின் பெயரால் ஆலயங்களில் அதிக செலவில் திருவிழாக்களைச் செய்வதைவிடுத்து மக்கள் மத்தியில் இறைபக்தியை ஏற்படுத்தி அவர்களுக்கு வழி காட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (உ)

# மாவட்டரீதியாகநடைபெறும் விஞ்ஞான தினம்

(புலோலி)

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் விஞ்ஞான அறிவியல் பரப்புக்குழு, கல்லூரி மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் முகமாக கல்வி மாவட்டங்கள் தோறும் விஞ்ஞானத் தினத்தைக் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டக் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் விஞ்ஞான தினம் கொண்டாடப்பட்டுவருகின்றது.

யாழ். மாவட்டத்தில் இம்மாதம் 10-ம் திகதி வேலணை மகாவித்தியாலயத்திலும், 11ம் திகதி தெல்லிப்பழை மத்திய மகாவித்தியாலயத்திலும், மன்னார் மாவட்டத்தில் 12-ம் திகதி பரி.சேவியர் பெண்கள் பாடசாலையிலும், வவுனியா மாவட்டத்தில் 13-ம் திகதி வவுனியா மத்திய மகாவித்தியாலயத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 14-ம் திகதி முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திலும், திருகோணமலை மாவட்டத்தில் 17-ம் திகதி பரி. மேரி கல்லூரியிலும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 18-ம் திகதி மட்டக்களப்பு பரி. வின்சென்ற்ஸ் கல்லூரியிலும், கல்முனை மாவட்டத்தில் 19-ம் திகதி கல்முனை பற்றிமா கல்லூரியிலும் விஞ்ஞானதினம் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விஞ்ஞான தினத்தில் கல்லூரி மாணவர்களுக்கான விஞ்ஞானப் பேச்சுப் போட்டி, விஞ்ஞான வினாப்போட்டி என்பன முக்கிய அம்சங்களாக இடம்பெறவுள்ளன. விஞ்ஞானச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், விஞ்ஞானக் கலந்துரையாடல்கள் என்பன பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படவுள்ளன. இத்துடன் விஞ்ஞானப் படக்காட்சிகளும் காண்பிக்கப்படவுள்ளதாக இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்தவரும் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியருமான திரு. வி. கே. கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

## பெண்கடத்தல்:

# மேலும் 3 இளைஞர்களுக்கு விளக்கமறியல்

(புலோலி)

வல்வெட்டித்துறைப் பெண் கடத்தல் சம்பவம் தொடர்பாக இராணுவத்தினரால் மீட்கப்பட்ட வான் வல்வெட்டித்துறைப் பொலிசாரால் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டது. அத்துடன் மேலும் மூன்று இளைஞர்களை பொலிசார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்துள்ளனர். இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இப்பெண்கடத்தல் சம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிசார் பாலசுப்பிரமணியம் ஜெயசங்கர், சுந்தரம் விஜயகுமார், நாகமுத்து யோகேந்திரன் ஆகிய மூன்று இளைஞர்களையும் பருத்தித்துறை நீதவான் திரு. கே. என். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்தனர். நீதவான் சந்தேக நபர்கள் மூவரையும் இம்மாதம் 8ம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். பொலிசாரினால் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்ட வான் வண்டி நீதிமன்றப்பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இப் பெண் கடத்தல் சம்பந்தமாக ஒன்பது இளைஞர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# குழப்பம் உண்டாக்க கருணாநிதி முயல்கிருர்

## எம். ஜி. ஆர். கண்டனம்!

சென்னை, செப். 7

தமிழக அரசுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதன் மூலம் தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி தமிழகத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்து வருகிருர் என்று தமிழக முதல்வர் திரு. எம் ஜி. இராமச்சந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க.வின் திருநெல்வேலி மாவட்ட மாநாட்டில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினூர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக தி. மு. க.வினர் இம்மாதம் 15ம் திகதி நடத்த இருக்கும் போராட்டம் குறித்து திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

''தடை உத்தரவு அமுலில் உள்ள வேளையில் போராட்டம் நடத்துவது வீண் பிரச்னைகளை ஏற்படுத்தும் இதனுல் ஏற்படும் விளைவுகளை திரு கருணநிதியே ஏற்கவேண்டும்.''

# "சேவகி பேக்கர் அம்மையார் இங்கிலாந்தின் கொடை"

## பொன்விழாவில் குருநாகல் பேராயர் புகழாரம்

[அரியாலை]

"ஐம்பது ஆண்டுகளாகக் கிறிஸ்தவ மிஷனரியாக ஊழியஞ்செய்திருக்கும் சகோதரி எலிசபத் பேக்கர் அம்மையார் கிறிஸ்தவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்த சேவாளியாகி இலங்கை மக்களுக்குத் தலைசிறந்த சேவகியாக விளங்கிவருகிறார். இவர் கிறிஸ்தவசபையின் அடையாளமாகவும், இங்கிலாந்துதேசம் எமக்கு அளித்த பெருங்கொடையாகவும் விளங்கிவருகிருர்''

இவ்வாறு குருநாகல் அத்தியட்சாதீன பேராயர் பேரருட் திரு லக்ஸ்மன் விக்கிரமசிங்கா ஆண்டவர் பரந்தன் நவஜீவன ஆலயத்தில் நடைபெற்ற நன்றிதெரிவிக்கும் திருவிருந்து ஆராதனையில் அருளுரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கிறிஸ்தவ மிஷனரியாகவும், இறந்த சமூகசேவகியாகவும் கடந்த ஐம்பது வருடங்களாக சேவையாற்றிவரும் சகோதரி எலிசபெத் பேக்கர் அம்மையாரின் பொன்விழா நன்றிதெரிவிக்கும் ஆராதனையில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

கிறிஸ்தவ மிஷனரிகளாக எமது நாட்டுக்கு வந்த அநேகர் தமது சேவைக்காலம் முடிவடைய தமது கடமைகள் முடிய தம் நாட்டிற்குத் திரும்பினூர்கள். ஆனுல் அம்மையார் தமது சேவைக்காலம் முடிய நமது இலங்கையிலே தங்கி மிகவும் பின்தங்கிய பகுதியாக விளங்கும் பரந்தன் பகுதியில் தொடர்ந்தும் சேவையாற்றிவருவது எமக்குப் பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

நோயாளர்களுக்கு வைத்தியராகவும், சிறுவர்களுக்குத் தாயாகவும், கல்வியற்றவர்களுக்குச் சிறந்த ஆசிரியையாகவும் அவர் ஆற்றிவரும் சேவைகள் என்றும் எம்மால் மறக்கமுடியாதவையாகும். மேலைத்தேயத்தில் பிறந்தாலும் நம்முடைய இளமைக்காலம் முதல் இறுதிக்காலம் வரை கீழைத்தேய மக்களோடிய எம்முடன் அவர் வாழ்ந்து வருவது கிறிஸ்துவுக்கும் கிறிஸ்தவ விசுவாசத்துக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது''

நன்றிதெரிவிக்கும் திருவிருந்து ஆராதனையை இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் வண சோமா பெரேரா அடிகளாரின் தலைமையில் நவஜீவன அதிபர் அருட்திரு ஏ. சி. தம்பிராசா அடிகளார், வண விக்சிலோ அடிகளார், தென்னிந்திய திருச்சபை யாழ் மாவட்ட முன்னுள் பேராயர் பேருன் திரு குலேந்திரன் ஆயர் ஆகியோரும் இன்னும்பல குருமார்களும் ஒப்புக்கொடுத்தனர்.

ஆராதனையின் ஆரம்பத்தில் அம்மையார் அவரது வாசஸ்தலத்திலிருந்து ஊர்வலமாக ஆலயத்திற்கு அழைத்துவரப்பட்டார்.

இவ்வாராதனையில் வடமாகாணத்தைச் சேர்ந்த எல்லாச்சபைகளிலிருந்தும் ஏராளமானேர் கலந்துகொண்டனர்.

## மரண அறிவித்தல்

### சு. பூபாலசிங்கம்

(இ. போ. ச. யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அம்மன் வீதியைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை பூபாலசிங்கம் (இலங்கை போக்குவரத்துச்சபை யாழ். பஸ் நிலைய நேரக்காப்பாளர்) காலமாகிவிட்டார். இவர் அழகம்மாவின் அன்புக் கணவரும், அன்பழகன் [இ. போ. ச, கிளிநொச்சி], அன்பரசி [இராமநாதன் கல்லூரி], அன்பழகி [பூநகரி மகாவித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இ. தியாகராசா [ஆசிரியை, கந்தர்மடம் சைவவித்தியாசாலை], பாக்கியநாதன் [பிரான்ஸ்], சண்முகராசா [யாழ் மாநகராட்சி மன்ற உறுப்பினர்]. ஆனந்தராசா [ஜேர்மனி], தேவராசா [பிரான்ஸ்], ஜெயராச [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், இ. தியாகராசாவின் [இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்] மைத்துனருமாவார்.

அன்னரின் ஈமக்கிரிகைகள் 8-9-81 செவ்வாய்க்கிழமை [இன்று] நண்பகல் 12 மணியளவில் மட்டுவில்நாடு, பூநகரியில் நடைபெறும்.

இத்தகவலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு சண்முகராசா [எம். எம். சி.]

[0869]

## சடலம் யாருடையது?

[யாழ்ப்பாணம்]

இனந்தெரியாத சடலமொன்று யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு கோவிலடியில் காணப்பட்டது.

சடலத்தை யாழ் ஆஸ்பத்திரிசவச்சாலைக்கு கொண்டு செல்லுமாறு மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ். பிரான்சிஸ் பணித்துள்ளார். [a]

## இன்று அடையாள அணிவகுப்பு

புலோலி

வல்வெட்டித்துறை பெண் கடத்தல் சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஒன்பது இளைஞர்களும் இன்று அடையாள அணிவகுப்புக்காக பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

யாழ். நகர மண்டப

## கூரையிலிருந்து தவறி விழுந்த சபை ஊழியர்!

[யாழ்ப்பாணம்]

யாழ் மாநகரசபைக் கூரையிலிருந்து தவறிவிழுந்த மாநகரசபை ஊழியரான சிவராசா பலத்த காயமடைந்தார்.

காயமடைந்தவரை உடனடியாக யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

யாழ் முதல்வர் திரு இராஜா விசுவநாதன் உதவி முதல்வர் திரு. சேவியர், ஆணையாளர் திரு. கே சிவஞானம் ஆகியோர், காயமடைந்தவரை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுத்தனர்.

யாழ் மாநகரசபை அறைக்கு மேல்கூரையில் இருந்து திருத்த வேலையில் ஈடுபட்ட போதே இச்சம்பவம் நடந்தது. [a]

## நாவற்பழங்களை சுவைத்த சிறுவனுக்கு நேர்ந்த கதி!

[யாழ்ப்பாணம்]

மரத்தின் கீழ் நின்று விழுந்த நாவற்பழங்களை பொறுக்கி ஊதிஊதி சுவைத்துக் கொண்டிருந்தபோது திடீரென்று மரம் முறிந்து விழுந்ததால் எட்டு வயதுச் சிறுவன் பலியானுன்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இம்மானுவேல் வசந்தனின் மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

நண்பர்கள் சிலருடன் விளையாடச்சென்ற சிறுவன் நாவல் மரமொன்றில் நண்பர்கள் ஏறி பழம் பறித்துப் போட கீழே நின்று அவற்றைப் பொறுக்கி சுவைத்துக் கொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது.

விசாரணையின்பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [a]

## மனைவி மரணம்; கணவர் மறைவு

மட்டக்களப்பு

இளம் குடும்பப்பெண்ணின் மரணத்தைத் தொடர்ந்து கணவர் தலைமறைவானுர்! இவரைத்தேடி பொலிசார் வலைவிரித்துள்ளார்,

வாழைச்சேனை பள்ளத்துச்சேனை பேரில்லாவெளி என்னும் இடத்தைச் சேர்ந்த செ- செல்வமாணிக்கம் (25 வயது) என்னும் நான்கு மாத கர்ப்பிணியே மரணமடைந்தவராவார்,

மரணவிசாரணையின்போது பெண்ணின் தகப்பனுர் மருமகன் தமது மகளை அடித்து துன்புறுத்துவதாக பொலிசில் முறைப்பாடு செய்திருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது,

பிரேத பரிசோதனை நடாத்திய சட்டவைத்திய அதிகாரி டாக்டர் பஞ்சலிங்கம் மலத்தின் அருந்தியமையினுல் ஏற்பட்ட மரணம் என்று தெரிவித்தார்

மேலும்விசாரணையை மேற்கொள்ளும்படி வாழைச்சேனை பொலிசாருக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி திரு காராளசிங்கம் பகிரங்க தீர்ப்பு வழங்கினுர் கு

சென்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் சென்று பத்து நிமிடங்களுக்குட் பின்பே சத்தம்போடும்படி காவலாளியிடம் கோஷ்டியினர் கூறிச்சென்றனராம்,

திருட்டுக் கோஷ்டியினர் சென்றபின்னர் காவலாளி அதிபருக்கு விஷயத்தை அறிவித்த தன் பேரில் அதிபர் பொலிசாருக்கு அறிவித்தார்.

நேற்று பகல் ஸ்தலத்துக்குச் சென்ற பொலிஸார் கைஅடையாளங்களை எடுத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் கணபதிப்பிள்ளை

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அமைப்பாளர் திரு ஆறுமுகம் கணபதிப்பிள்ளை காலமானுர். இவர் நல்லம்மாவின் அன்புக்கணவரும், தவச்செல்வம், தவேந்திரா ஆகியோரின் தந்தையும், சோதியின் மாமனுமாவார். ஈமக்கிரிகைகள் இன்று (8-9-81) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

0872

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 8-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Pape at the General Post office: Sri Lanka Regd. Q. B. 10/236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.